திருக்கோயிலுக்கும், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தபிறகு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, திருக்கோயில் வசம், இடங்கள் இருக்குமென்றால், அந்தத் திருக்கோயில் சார்பில் நிதியாதாரம் இல்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையினுடைய ஆணையாளரின் பொது நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

239—

நூலகத்தைச் சீரமைத்தல்

***389—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் உள்ள நூலகத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், சட்டமன்றத்திலிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், இன்றைக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிக்கொண்டிருக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் என்ற முறையில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் பொது நூலகத் துறையின் சார்பாகக் கத்திவாக்கத்தில் ஒரு கிளை நூலகம் 1962 ஆம் ஆண்டிலிருந்து

ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருப்பது உண்மைதான். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்தக் கட்டடம் மிகவும் சிதிலமடைந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தக் கட்டடத்தைச் சீரமைப்பதுகூட தேவைப்படாது. அந்தக் கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு, புதிதாகத்தான் கட்டவேண்டும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு நிதி தருவதாக மனமுவந்து சொல்லியிருக்கின்றார். கண்டிப்பாக அந்த நிதி பெறப்பட்டபிறகு, உடனடியாகச் செய்து தரப்படும். ஏனென்றால், இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இருக்கிறது. அந்தக் கட்டடத்தில் பருவ இதழ்கள் பிரிவு, நாளிதழ் பிரிவு என்ற பிரிவுகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நூல்களை இரவலாகத் தருகின்ற பிரிவும் இருக்கின்றது; இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றன. கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பெறப்பட்டதும் உடனடியாகக் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.*

திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் கத்திவாக்கம் பகுதியில் பொது நூலகம் உள்ளது. அந்த நூலகம் பராமரிப்பின்றி சேதமடைந்து, இடியும் நிலையில் உள்ளது. அந்த நூலகத்தில் சுமார் 4,500 மக்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலிலேயே கூறியிருக்கிறேன். அந்நூலகத்திற்குக் கண்டிப்பாக புதிய கட்டடம்தான் கட்டித் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த நூலகத்தைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் அதைச் சீரமைக்கப் போவதில்லை; புதிதாகக் கட்டித் தரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த நூலகத்தில் கிட்டத்தட்ட 43,000 புத்தகங்கள் உள்ளன; ஏற்கெனவே 4,500 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போதைய நிலையில், அந்நூலகம் 600 சதுர அடி பரப்பளவில் இருக்கிறது; 440 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட building ஆக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் நகராட்சி நிர்வாகத்திற்குச் சொந்தமான 5 சென்ட் நிலம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்நூலகத்திற்கு கூடுதல் இடம் தேவைப்படுமெனில், மேற்படி நிலமும் துறையின் சார்பாகக் கோரப்பட்டு, கண்டிப்பாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இலட்சம் மக்கள் வாழக்கூடிய என்னுடைய திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில், 2–வது வார்டில் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அந்த மக்களுக்கு இந்த நூலகம் பெரிதும் உதவுகிறது. அந்தப் பகுதி, உழைக்கும் மக்கள் வாழக்கூடிய, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். அந்தப் பகுதியில் படிக்கக்கூடிய மக்களுக்காக, மாணவச் செல்வங்களுக்காக, தென் சென்னையில் உள்ள நூலகத்தைப் போன்று வட சென்னையிலும் ஒரு நூலகம் அமைத்துத் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், திருவொற்றியூர், மணலி மற்றும் கத்திவாக்கம்

2022 மே 6]

ஆகிய பகுதிகளில் உள்ள நூலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நூலாக இருந்தாலும், நூலகங்களாக இருந்தாலும், அதைச் சார்ந்து நடைபெறும் புத்தகக் கண்காட்சியாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். BAPASI *அமைப்பின் மூலமாக நடத்தப்படும் சென்னை புத்தகக் கண்காட்சிக்கு அரசாங்கம் 75 இலட்சம் ரூபாய் நிதி வழங்குவது வழக்கம்தான். ஆனால், கடந்த ஜனவரி மாதம்கூட, அதற்கான ஏற்பாடுகளை செய்த பின்னர், கொரோனா தொற்றின் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்காரணமாக, அதற்கு இழப்பீடும் இருக்கும் என்பதை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக 75 இலட்சம் ரூபாய் மட்டுமல்லாமல், கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் அந்தப் புத்தகக் கண்காட்சிக்கு வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் நூல்களாக இருந்தாலும், நூலகங்களாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் தரப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. வெற்றிஅழகன் அவர்கள்.*

திரு. அ. வெற்றிஅழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்து, அதனை படிப்படியாக 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)* IMH*–ஐ தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம்* TNIMHANS *என்ற உயர்நிலை அமைப்பாக மாற்றிட, என்னுடைய சட்டமன்ற உரையில் நான் பேசியிருக்கக்கூடிய அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முதற்கட்டமாக, அதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பித்த, எங்கள் முதல்வர் அவர்களுக்கு, எங்கள் வில்லிவாக்கம் தொகுதி மக்களின் சார்பாகவும், என் தந்தை திரு. அன்புச்செல்வன் அவர்கள் சார்பாகவும் பணிவான வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியிலுள்ள 424 மாணவர்கள் பயின்று வரும் சிட்கோ நகர் அரசு துவக்கப் பள்ளியில் 8 வகுப்பறைகளே உள்ளன. அதற்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட தங்களின் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. அன்பிலார் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை என்றாலும், தற்போது கட்டடங்கள் என்பதைப் பார்க்கின்றபோது, அடுத்த 5 வருடங்களில் கிட்டத்தட்ட 18,000 வகுப்பறைகள், கழிவறை வசதிகளுடன் சேர்த்து கட்ட பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மூலமாக ஏறத்தாழ 7,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு அதற்கென்று முதற்கட்டமாக 1,300 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பள்ளிக்கு 8 வகுப்பறைகளே உள்ளன என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கு என்னென்ன கட்டடங்கள் தேவை என்பது குறித்து சம்பந்தப்பட்ட CEO மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, உடனடியாக செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, சிதம்பரம் நகரில் பழமை வாய்ந்த நூலகம் செயல்பட்டு வருகிறது. அங்கு 1 இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. 17,000 உறுப்பினர்களைக் கொண்ட இந்த நூலகத்திற்கு தினந்தோறும் 500–க்கும் மேற்பட்டோர் வருகை தருகிறார்கள். இந்த நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நகராட்சிக்குச் சொந்தமான 4,000 சதுர அடி நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த

2022 மே 6]

இடத்தில் நூலகம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, கிட்டத்தட்ட 1 இலட்சத்து 20 ஆயிரம் புத்தகங்கள் இருக்கின்றன என்று சொன்னால், கண்டிப்பாக அது அனைவருக்கும் பயன்படக்கூடிய நூலகமாகத்தான் இருக்கும். அந்த நூலகம் வாடகைக் கட்டடத்தில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதற்கான விதிமுறைகள் நான் ஏற்கெனவே சொன்னவை தான். ஒரு நூலகம் ஆரம்பிக்கும்போதே,* future*–ல் ஒரு நூலகக் கட்டடத்தைச் சொந்தமாகக் கட்ட வேண்டுமென்று சொன்னால், 5 சென்ட் இடத்தை இலவச பத்திரப் பதிவாக நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கியிருக்க வேண்டும். அப்படியிருக்கின்றபட்சத்தில் அதையெல்லாம் கலந்தாலோசித்து,* local*–ல் இருக்கின்ற* District Library Officer *மூலமாகக் கருத்துரு கேட்கப்பட்டு, உடனடியாக அது கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.*

திரு. கு. சின்னப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் நகரில், அரியலூர் மாவட்ட மத்திய நூலகம் பழமையான கட்டடத்தில் இருக்கிறது. இன்றைக்கு போட்டித் தேர்வாளர்கள், போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் படிக்கின்ற அளவிற்கு அங்கு எவ்வித வசதியும் இல்லை. அதனால், அரியலூரில் பல்வகை வளாகம் அமைந்துள்ள இடத்தில் 25 சென்ட் இடத்தை ஒதுக்கச் சொல்லி மாவட்ட நூலக அலுவலர் கேட்டுள்ளார். அதற்கு இந்த ஆண்டிலே புதிய கட்டடம் கட்டித் தர முடியுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத்திற்கான இடத்தை நீங்கள் வழங்குகின்றபட்சத்தில் கண்டிப்பாக அது செய்து தரப்படும். அதேபோன்று, நீங்கள் போட்டித் தேர்வுக்கென்று தனியாக பயிற்சி மையங்கள் உள்ளிட்ட வசதிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிறைய rural area–வில் அதற்கான resource இல்லாமலேயே இருக்கின்றது. Rural area–ல் படிக்கின்ற குழந்தைகளுக்கு போட்டித் தேர்வுக்குப் பயிற்சியாளர்கள் வர வேண்டுமென்று சொன்னால், யாரும் கிராமப் பகுதிகளுக்குச் செல்லமாட்டேன் என்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டுதான், நம்முடைய கல்வித் தொலைக்காட்சியிலே அதற்கென்று தனியாக நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதையும் ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அதற்கான பணியிலும் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுமாதிரி, அந்த இடம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பேசி, அதற்கான இடம் எங்களுக்கு வழங்கப்படும்போது, தேவைப்படுமெனில் கண்டிப்பாக அதற்குக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

240—

விளையாட்டு மைதானம்

***10104—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?